**செய்தி வெளியீடு எண் : 273** **நாள் : 10.02.2024**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு**

தலைவர் கலைஞர் அவர்கள் 25 ஆண்டுகளுக்கு முன்பு நடத்திய 'தமிழிணையம்–99' மாநாட்டைத் தொடர்ந்து நமது திராவிட மாடல் அரசு பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாட்டை நடத்தியுள்ளது.

இந்தக் கால் நூற்றாண்டில் இத்துறை அளப்பரிய மாற்றங்களை, வளர்ச்சியைச் சந்தித்துள்ளது. Artifical Intelligence, Machine Learning, Natural Language Processing Tools என இன்று இணையம் மொத்தம் பரவியிருக்கும் புதிய தொழில்நுட்பங்களுக்கேற்ப நம் தமிழ்மொழியைத் தகவமைத்திடும் சிந்தனைகளுக்கு ஊக்கமாக இந்த மூன்று நாள் மாநாடு நடந்தேறியுள்ளது.

உலகின் முன்னணி மொழிகளுக்கு இணையான வேகத்தில் தமிழ்மொழியும் தொழில்நுட்பத் துறையில் தடம்பதிக்க வித்திடும் மாண்புமிகு அமைச்சர் பழனிவேல் தியாக ராஜன் அவர்களுக்கு வாழ்த்துகள்! இம்மாநாட்டின் வெற்றிக்கு உழைத்த அனைவருக்கும் பாராட்டுகள்!

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in